## தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

## இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

## 2024-03-17

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எரேமியா நூலிலிருந்து வாசகம்.* 31:31-34,

*பல்லவி: கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்:,*

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 7-9,

*யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம்* 12: 20-33)

## திருப்பலி முன்னுரை

*என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்றச் செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன்.*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று நாம், தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு தினத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்க ஒன்று கூடியுள்ளோம். இயேசுவில் நம்பிக்கை கொண்ட மக்கள் யூதர்கள் மட்டுமல்ல, பிற இனத்தாரும் அவரை ஏற்றனர் என்னும் உண்மையை இங்கே யோவான் நற்செய்தி தெரிவிக்கிறது. "இயேசுவைக் காண விரும்பி" வருகின்ற மக்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களது உள்ளத்தில் எழுகின்ற தாகத்தைத் தணிக்க வேண்டும் என்றால் அவர்களை வாழ்வின் ஊற்றாகிய இயேசுவிடம் நாம் இட்டுச் செல்ல வேண்டும். இயேசுவே நமக்கு வாழ்வளிக்கின்றார். மண்ணில் விழுந்து மடிகின்ற கோதுமை மிகுந்த விளைச்சலைத் தருவதுபோல, சிலுவையில் இறக்கின்ற இயேசு நமக்கு நிலைவாழ்வு அளிக்கிறார். அவரை நாம் அணுகிச் சென்று வாழ்வு பெறுவதோடு பிறரையும் அவரிம் கூட்டிச் செல்லவும், நற்செய்தியின் தூதுவர்களாக எங்களை மாற்றவும் தொடரும் திருப்பலியில் வரம் கேட்டுச் செபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*நிலைவாழ்வு தருபவராம் இறைவா,*

*உம்மில் நம்பிக்கை கொண்டு, உமது திருமகனின் அரசை உலகெங்கும் நிறுவ உழைத்து வருகின்ற திருச்சபையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலை யினர் அனைவருக்கும் நிலைவாழ்வைப் பரிசளிக்க வேண்டுமென்று உம்மைப் பணிந்து மன்றாடுகிறோம்.*

*நீதியை நிலைநாட்டும் இறைவா,*

*எங்களிடம் தான் எத்தனை முகமூடிகள். பொன்னும், பொருளும், உடையும், உறைவிடமும் எங்கள் மதிப்பை உயர்த்துவதாக வீண்பெருமை கொள்ளும் எங்களை மன்னித்தருளும். நாங்கள் வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறைகளாக வாழாமல் போலியைத் தேடி தேடி எங்கள் வாழ்வை விரையம் ஆக்காமல் நாள்தோறும் செபித்து உம் வார்த்தைகளைத் தியானித்து உமது மதிப்பீடுகளில் ஊன்றி நிற்கும்போதுதான் நாங்கள் உண்மையாகவே மதிப்பிற்குரியவர்கள் என்பதை எங்களுக்கு உணர்த்தி அருள வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்.*

*நீதியை நிலைநாட்டும் இறைவா,*

*இன்றைய குடும்பங்களில் உண்மையான அன்பு நிலவிடவும், உறவுகளைச் சிதைக்கின்ற சுயநலம், பொருளாசை இவை மறைந்து தியாக மனம் உருவாகிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வல்லமை மிகுந்தவராம் இறைவா,*

*இயற்கைச் சீற்றங்களாலும், உடல்நல பாதிப்புகளாலும், மன வேதனைகளாலும், மற்ற வாழ்க்கைப் போராட்டங்களாலும் பாதிக்கப்பட்டுத் துன்புறும் அனைவருக்கும் புதுவாழ்வு வழங்க வேண்டுமென்று பணிவன்புடன் உம்மை மன்றாடுகிறோம்.*

*ஞானத்தின் ஊற்றாம் இறைவா,*

*இவ்வுலகின் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் சிக்கி இறையன்பையும் பிறரன்பையும் புறக்கணித்து வாழும் மனிதர்கள், சமூக அநீதிகளுக்கு எதிரானவர்களாகவும் அமைதி ஏற்படுத்துபவர்களாகவும் மாற அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*எம்மை அரவணைக்கும் எம் இறைவா!*

*உலகிற்கு, உப்பாக ஒளியாக விளங்கிட, எம் குடும்பங்களை அர்ப்பணிக்கின்றோம். இன்று குடும்ப உறவுகளில் நிலவும் பிரச்சினைகள், வேறுபாடுகள், தனிகுடும்ப வாழ்வு, பெற்றோர்களால் தனித்து விடப்படுதல் போன்ற இவைகளிலிருந்து அனைத்தும் மாற்றம் பெற்று ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு மன்னித்து வாழக்கூடிய நல்ல மனதினை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*